SRI LANKA

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் II பரீட்சை – ஜூலை 2023

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (203) வியாபாரச் சட்டம் (BLA)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு**

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

**மட்டம் II பரீட்சை – ஜுலை 2023**

**(203) வியாபாரச் சட்டம்**

**பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**

**(மொத்தம் 25 புள்ளிகள்)** **பகுதி - A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

1.1 (1)

1.2 (3)

1.3 (4)

1.4 (3)

1.5 (1)

1.6 (4)

*(ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்,)*
*(12 ள்ளிகள்)*

1.7 சரி

1.8 தவறு

1.9 சரி

*(ஒவ்வொன்றுக்கும் 1 புள்ளிகள்)*
*(03 புள்ளிகள்)*

1.10 **கீழ்குறிப்பிற்றவற்றுள் ஏதாவாது இரண்டு (02)**

- மாற்றுண்டியலின் பெறுமதியினை பெறுவதற்கான முன்னுரிமை
- மாற்றுண்டியலின் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக முன்னைய தரப்பினருக்கு எதிராக வழக்கு தொடரும் உரிமை
- பேச்சுவார்த்தைகளின் ஊடாக பொருட்களின் நல்ல உரித்தை மாற்றுதல்

**1.11 கீழ்குறிப்பிற்றவற்றுள் ஏதாவாது இரண்டு (02)**

- பொருட்களை அடையாளப்படுத்துவதற்கான விசேடத்தன்மை
- பொருட்களின் அளவு, நிறை மற்றும் தொகை
- பொருட்களின் தரம்

**1.12 கீழ்குறிப்பிற்றவற்றுள் ஏதாவாது இரண்டு (02)**

- காசுக்கட்டளை
- அஞ்சற் கட்டளை
- நிலையான வைப்புச் சான்றிதழ்
- பங்குச் சான்றிதழ்
- கடன் பத்திரம்
- வார்நாமம் (Bill of Lading)
- வைப்புச் சான்றிதழ்

**1.13 கீழ்குறிப்பிற்றவற்றுள் ஏதாவாது இரண்டு (02)**

- ஒப்பந்தத்தின் மூலம் விலை நிர்ணயித்தல்
- உடன்படிக்கை ஒப்பந்தத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் கணித்தல்
- தரப்பினர்களுக்கு இடையேயான கலந்துரையாடப்பட்ட காரணி ஊடாக தீர்மானித்தல்
- நியாயாமான விலை

**1.14 கீழ்குறிப்பிற்றவற்றுள் ஏதாவாது இரண்டு (02)**

- வழக்கிடு உரிமை
- போக்குவரத்து நிறுத்தத்திற்கான உரிமை
- மறுவிற்பனைக்கான உரிமை

***(ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்)***
***(10 புள்ளிகள்)***

***(25 புள்ளிகள்)***

***A பகுதி முடிவு***

aat SRI LANKA

***வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**அத்தியாயம்: காப்பீட்டு சட்டம், வாடகை கொள்முதல் மற்றும் குத்தகை (*Law Of Insurance, Hire Purchase and leasing)***

**(அ)** காப்பீட்டு ஒப்பந்தமானது மிக உயர் நல்லெண்ண (Unberrimae Fidei) அடிப்படை கோட்பாட்டின் அடிப்படையில் தோன்றும் ஒப்பந்தமாகும். அதன்படி, காப்பீட்டு ஒப்பந்தமொன்றில் ஈடுபடும்போது அல்லது குறித்த ஆரம்ப கட்டணத்தொகையில் ஒப்பந்தத்திற்குள் உள்நுழையும்போது அனைத்து தரப்பினரும் அனைத்து தகவல்களையும் வெளிப்படுத்த வேண்டும் என்பதுடன் அவை தரப்பினரின் முடிவினை எடுப்பதிலும் செல்வாக்கு செலுத்தும். இக்கொள்கையானது காப்பீட்டு பரிவர்த்தனையில் ஈடுபடும் தரப்பினர் உண்மையானவர்கள் என்பதற்கு பொதுவான உத்தரவாதத்தினை வழங்குகிறது. உண்மை நிகழ்வுகளை மறைத்து செய்யப்படும் காப்பீட்டு ஒப்பந்தமானது வலிதற்றதாகும். உண்மை நிகழ்வுகளை மறைத்தல் ஊடாக ஏற்படும் பிறழ்பகர்வானது ஒப்பந்தத்தின் நல்லெண்ணத்தினை முறிவடையச்செய்யும்.

மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில், **வலிமுனி** காப்பீட்டு கம்பனியுடன் காப்பீட்டு கொள்கையில் ஈடுபட்ட நேரத்தில் அவரது மருத்துவ நிலைகள் தொடர்பில் வெளிப்படுத்தாமை அவரது உண்மை நிகழ்வுகளை மறைத்தலாகாது. ஆயட்காப்புறுதியுடன் தொடர்புடைய மருத்துவ பரிசோதனையின்போது, வைத்திய நிபுணர் ஒருவரின் வைத்திய ஆலோசனைகளை கடந்த 05 வருடங்களில் பெற்றுக்கொண்டுள்ளீர்களா? எனத் தெளிவாக கேட்கப்பட்டார். மருத்துவ ஆலோசனையின் கீழ் உள்ளிழுப்பானை (இன்ஹேலர்) உபயோகிக்கினறபோதும் **வலிமுனி** மருத்துவ ஆலோசனையினை தொடரவில்லை என காப்பீட்டு கம்பனிக்கு வெளிப்படுத்துகின்றார். காப்பீட்டு ஒப்பந்தத்தின் உயரிய நல்லெண்ண (Unberrimae Fidei) கோட்பாட்டை நிகழ்வு பிறழ்பகர்வின் ஊடாக மிறீயுள்ளார். ஆகவே, காப்பீட்டாளர்களின் பொறுப்புடைமயானது தவறான கூற்றின் அடிப்படையில் நிராகரிக்கப்படலாம் என்பதுடன் அது காப்பீட்டுச் சட்டத்தின் ஊடாக நியாயப்படுத்தப்படலாம். ஆயுட்காப்புறுதி கீழ் நட்டஈட்டினை பெறுவதற்கான உரிமை **வலிமுனியின் மனைவிக்கு** இல்லை.

வழக்குச் சட்டம் ***Looker vs Law Union Insurance Company***

***(06 புள்ளிகள்)***

(ஆ).

- **முதற் கட்சிக்காரர்**

  காப்பீட்டு திட்டத்தை முன்வைப்பவர் அல்லது காப்பீட்டுத் தொகையினை பெறுபவர் ''காப்பீடு செய்தவர்'' எனக் கருதப்படுவார்.

- **இரண்டாம் கட்சிக்காரர்**

  காப்பீட்டு திட்டத்தை ஏற்பவர் அல்லது காப்பீட்டுக் கம்பனி ''காப்பீட்டாளர்'' எனக் கருதப்படுவார்.

- **மூன்றாம் கட்சிக்காரர்**

  முதற் மற்றும் இரண்டாம் தரப்ப்பினரை தவிர்த்து வெளி தரப்பினரின் உறவாகும். அவை உடன்படிக்கையின் செயற்பாட்டின்போது தோன்றும்.

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**அத்தியாயம் 07- தொழிற்சட்டம் *Labour Law1983***

**(அ)** 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் வெளிப்படையாக விலகளிக்கப்படாத சந்தர்ப்பம் தவிர்தது ஒவ்வொரு பணியாளரும் தான் அவரது பணியை நிறுத்தியவுடன் பணிக்கொடையை பெற தகுதியுடையவராவார். ஒவ்வொரு பணியாளரும் தனது பணிக்கொடையினை பெறுவதாயின் குறித்த தொழில் வழங்குனரின் கீழ் 05 வருடகாலம் சேவைப்புரிந்திருக்க வேண்டும். தொழில் தருநருடன் பணிப்புரிந்த ஆண்டுகளின் எண்ணிக்கையிலிருந்து கடைசி மாதச் சம்பளத்தின் பாதியை பெருக்குவதன் மூலம் பெறப்படும் தொகையை பணிக்கொடையாக பெறலாம்.

$$\text{பணிக்கொடை} = \frac{\text{கடைசி மாதச் சம்பளம்}}{2} \times \text{பணிப்புரிந்த ஆண்டுகளின் எண்ணிக்கை}$$

$$= \frac{200{,}000}{2} \times 5$$

$$= 500{,}000/-$$

அதன்படி, ரோஸி பணிக்கொடையாக ரூபா500,000/- இனைப் பெறலாம்.

*(04 புள்ளிகள்)*

**(ஆ)** ஊழியர் சேமநல நிதிச் சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட வழக்குகளில் மட்டுமே ஒரு பணியாளர் ஊழியர் சேமநல நிதியினை திரும்பப்பெறலாம். வேறொரு நாட்டிற்கு நிரந்தரமாக குடிப்பெயர்வது ஊழியர் சேமநல நிதியினை பெறுவதற்கான ஒரு சந்தர்ப்பமாக வாய்ப்பாகக் காணப்படுகின்றது. எனவே, ரோஸி ஊழியர் சேமநல நிதியினை பெறுவதற்கான சட்ட உரிமை காணப்படுகின்றது.

*(03 புள்ளிகள்)*

**(இ)** - தொழில் தருநர்களிடமிருந்து பொருத்தமான பங்களிப்பை சேகரித்தல்

- ஒவ்வொரு உறுப்பினரதும் உறுப்பினர் கணக்குகளை பராமறித்தல்
- உறுப்பினர்கள் கோரும் தொகையினை செலுத்துதல்
- உறுப்பினர்களது நலத்திட்ட நிதியினை நிர்வகித்தல்
- குறைபாடுகளை கண்டறிந்து சட்ட நடவடிக்கைகளை எடுத்து அபராதமிடுதல்
- வேறுப்பட்ட கைமாற்றத்தகு ஆவணங்களின் ஊடான நிதியினை விசாரித்தல்
- ஒவ்வொரு உறுப்பினரதும் ஈவுத்தொகையினை ஆண்டிறுதியில் செலுத்துதல்

***(04 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**அத்தியாயம் 04 – வணிகச் சூழலுடன் தொடர்பான குற்றங்கள் (*Offences related to the business environment)***

**(அ)** காப்புரிமைச் சட்டத்தின் பிரிவு 06 இன் கீழ், குறித்த புத்தகத்தின் பதிப்புரிமையானது குறித்த புத்தகத்தின் எழுத்தாளரையேச் சாரும். பாரம்பரிய, கலை மற்றும் அறிவியற் சார் தொழிலில் ஈடுபடுவர்களின் படைப்புக்கு வழங்கப்படும் பொருளாதார, தார்மீக உரிமைகள் பதிப்புரிமை அல்லது காப்புரிமை எனப்படும்.

குறித்த படைப்பின் மறு உருவாக்கம், விற்பனை அல்லது குத்தகை, விநியோகம், பொது மக்களுக்கு மாற்றுதல், குறித்த படைப்பின் மொழிப்பெயர்ப்பு போன்றவற்றிற்கான பொருளாதார உரிமைகளை அதன் உரிமையாளர் அனுபவிக்கின்ற அதேவேளை, படைப்புடன் தொடர்புடைய சிதைவு, திரிபடைதல், அல்லது மெருகூட்டுதல் அல்லது இழிவுப்படுத்தல் காரணமாக படைப்பாளியின் நற்பெயருக்கு அல்லது மரியாதைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் போது அவற்றிற்கு எதிராக அதன் உரிமையாளருக்கு தார்மீக உரிமைகளை அனுபவிக்கலாம்.

குறித்த படைப்பு பொது மக்களுக்கு வழங்கப்பட்ட நாளிலிருந்து அரஷவரது வாழ்நாள் வரைக்கும், அவரது இறப்பின் பின்னர் 70 ஆண்டுகளுக்கும் அதன் உரிமையாளருக்கு பதிப்புரிமை காணப்படுவது பொது விதியாகும்.

**சுரேஸ்** அவர்களின் ‘‘நல்ல நண்பன்’’ என்ற நூலினை வேறொரு பெயரில் வெளியிட்டமையின் மூலம் **நிமல்** அதன் உரிமையாளரின் தார்மீக உரிமைகளை மீறியுள்ளார். அதன் ஊடாக குறித்த புத்தகத்தனை இழந்தமையின் ஊடாக **சுரேஸ்** தனது நற்பெயருக்கு அல்லது மரியாதைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் **சுரேஸ்** வாரிசுகயும் ‘‘நல்ல நண்பன்’’ என்ற நூலினை விற்பனை செய்வதன் ஊடாக பெறப்படும் இலாபத்தினை பெறும் உரிமையையும் இழந்துள்ளனர். நிமலின் நடவடிக்கையால் **சுரேஸ்** அவர்களின் பதிப்புரிம மீறப்பட்டுள்ளதுடன்

**சுரேஸ்** அவர்களின் மனைவி மற்றும் வாரிசுகள் புலமைச்சொத்துரிமை மீறப்பட்டமைக்கான நிமலுக்கு எதிராக வழக்குத் தொடரலாம். அவருக்கும் 70 ஆண்டுகளுக்கு பொருளாதார, தார்மீக உரிமைகள் பதிப்புரிமை காணப்படுகின்றது.

***(06 புள்ளிகள்)***

**(ஆ)**

- புலமைச்சொத்துடன் தொடர்புடைய சட்டங்களை வழங்குதல்
- பதிவு கட்டுபாடு மற்றும் நிர்வாகத்திற்காக திறமையான நடபடிமுறையை வழங்குதல்
- இலங்கையின் புலமைச்சொத்திற்கான பொது நிர்வாகியை நியமித்தல்
- உயர் நீதிமன்றத்தின் விசேட ஏற்பாட்டுச்சட்டம் மற்றும் சுங்கக் கட்டளைச்சட்டத்தினை திருத்துதல்

***(04 புள்ளிகள்)***

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**அத்தியாயம் 05: கம்பனி மற்றும் பங்குடமைச் சட்டம் (*Company & Partnership Law*)**

**(அ) வணிகத்தின் இருப்பு**

1840 ஆம் ஆண்டு பங்குடமைக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 45 இன் கீழ் எந்தவொரு வர்த்தகம், தொழில் அல்லது தொழில்வாண்மை ரீதியாக பங்குடமை உறவினை ஏற்படுத்திக்கொள்ளலாம். இந்த வரைவிலக்கணத்தின் அடிப்படையில், எந்தவொரு பங்குடமை வணிகச் செயற்பாடுகளுக்கும் கட்டளைச்சட்டத்தின் கீழ் மட்டுபாடுக்ள வெளிப்படுத்தப்படவில்லை என்பது தெறிவாகின்றது.

aat SRI LANKA

எவ்வாறாயினும், நிதிச் சந்தை விதிமுறைகளுக்கு அமைவாக வங்கி வணிகம், காப்பீட்டு வணிகம் அல்லது நிதியியலி நிறுவனம் பங்குடமை வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடமுடியாது. பங்குடமை ஒன்றினை அடையாளப்படுத்துதல் தொடர்பில் பங்குடமைக் கட்டளைச்சட்டம் குறிப்பிடுவதாவது, வணிக்கத்தில் தொடர்ச்சியானதொரு இருப்பு காணப்படவேண்டும் என்பதாகும். உதாரணமாக, மோட்டார் வாகனமொன்றினை கொள்வனவு செய்து அதனை திருத்தி மீள் விற்பனை செய்து இலாபத்தினை பிரித்துக்கொள்ளும் நோக்கில் செய்யப்படும் உடன்படிக்கை பங்கடமை வியாபாரமாகும். எனினும் அதற்கு நிரந்தரமானதொரு இரப்பு காணப்படவில்லை.

**இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் கூட்டிணைவு**

பங்குடமை வியாபாரமொன்றில் ஈடுபடுவதற்க குறைந்தது 02 நபர்களாவது காணப்படவேண்டும். பங்குடமைக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அதிகூடுதலாக எத்தனை பங்காளர்கள் காணப்படவேண்டும் என்ற கட்டுபாடடொன்று இல்லை. எனினும் 2007 ஆம் ஆண்டு 07 ஆம்

இலக்க பிரிவு 519 இன் கீழ் இருபத பங்காளர்கள் காணபடவேண்டும் என்ற மட்டுபாடு விதிக்கபபடுள்ளது.

**இலாப நோக்கம்**

பங்குடமை வியாபாரத்தின் நோக்கம் இலாபத்தினை ஈட்டுவதாகக் காணப்படவேண்டும். பங்குடமையானது சங்கங்கள் மற்றும் மன்றங்களிலிருந்து வேறுபட்டதாகும். ஏனெனில் அவற்றிற்க இலாப நோக்கம் காணப்படுவதல்லை.

**பங்குடமைக்கான ஒப்பந்தம்**

பங்காளர்கள் தங்களது வியாபாரத்தினை இணைந்த செய்வது தொரடர்பில் பொதுவாதொரு உடன்படிக்கை காணப்படவேண்டும். அத்துடன் இலாபம் மற்றும் நட்டத்தினை சமமாக பிரித்துக் கொள்ளவேண்டும். பங்காளர் ஒருவருக்கு ஈட்டப்பட்ட இலாபத்தின் ஒரு பகுதி கிடைக்கின்றது என்பதற்காக அவர் குறித்த பங்குடமை வியாபாரத்தின் பங்காளராக கருத்தப்படமாட்டார் என்பதை புரிந்துக்கொள்ள வேண்டும்.

***(06 புள்ளிகள்)***

**(ஆ)**

பங்குடமை வியாபாரத்தின்போது எந்தவொரு பங்காளருக்கும் பின்வரும் உட்கிடையான அதிகாரங்கள் காணப்புடகின்றன.

- பங்குடமை வியாபாரத்தில் பொருட்களை விற்பனைச் செய்தல்
- பங்குடமை வியாபாரத்திற்கான பொருட்களை விற்பனைச் செய்தல்
- பங்குடமை வியாபாரத்தின் வரவுகளை வசூலித்தல் மற்றும் அவற்றிற்கான ரசீதுகளை வழங்குதல்
- பங்குடமை வியாபாரத்திற்கான பணியாளர்களை சேர்த்தல்

***(04 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**அத்தியாயம் 04 : முகவராண்மை சட்டம் (*Law of Agency)***

**அ)** மேற்குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பத்தில் முகவராண்மையின தன்மையின் அடிப்படையில் **சரத்** மற்றும் **கபில** ஆகியோர் ''வெளிப்படுத்தப்பட்ட முகவராண்மை'' இன் கீழ் உள்வாங்கப்பட்டவர்கள். இங்கு **சரத் கபில** அவர்களை நேரடியாகவே தனது கோழிப்பண்ணை வியாபாரத்தில் முகவராக நியமிக்கின்றார்.

***(03 புள்ளிகள்)***

**ஆ)**

மேற்குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பத்தில் மறைமுகமான முகவராண்மை ஊடாக விதிகள் தோன்றியுள்ளன. முதல்வர் குறித்த நபர் ஒருவரை குறித்த பதவிக்காக அல்லது குறித்த அலுவலகத்தில் வேலைக்கு அமர்த்துகின்றபோது குறித்த பதவியுடன் தொடர்புடைய அதிகாரங்களையும் வெளிப்படையாக வழங்கபட்டாவிட்டாலும் குறித்த பதவியின் தன்மை மற்றும் பொறுப்புடைமையின் அடிப்படையில் முதல்வர் சார்பாக குறித்த அதிகாரங்கள் உட்கிடையாக வழங்கப்பட்டதாகவே கருதப்படும்.

இங்கு **கபில** கோழிப்பண்ணை வியாபாரத்தின் முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். குறித்த வியாபாரத்தின் முகாமையாளர் என்ற அடிப்படையில் அவரது பதவியின் தன்மை மற்றும் பொறுப்புடைமையின் காரணமாக குறித்த விடயங்களை செய்யவேண்டியது வெரது கடமையாகும். எனினும் உடன்படிக்கை ஊடாக வெளிப்படையான அதிகாரம் வழங்கப்படவில்லை. எனவே, **கபில** இற்கு கோழித்தீவனத்தை கொள்வனவு செய்வதற்கான உட்கிடையான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில், (Hely-Huchinson vs Brayhead Ltd) வழக்கில் கம்பனியின் நிர்வாக அதிகாரிக்கு இழப்பெதிர் காப்பீடு வழங்குவதற்கான வெளிக்கடையான அதிகாரம் வழங்கப்படவில்லை. அவரது பதவி நிலைக் காரணமாக கம்பனி சார்பாக அவர் அதனை செய்தார். எனினும் உடன்படிக்கையில் ஈடுபடுவதற்கான அதிகாரம் உட்கிடையாக வழங்கப்பட்டதாகவேு கருதப்படும்.

இருப்பினும் **கபில** இற்கு கோழித்தீவனத்தை கொள்வனவு செய்வதற்கான உட்கிடையான அதிகாரத்தினை பயன்படுத்தியமையால் அவரது முதல்வர் **சரத்** கோழித்தீவனத்தை கொள்வனவு செய்வதற்கான தொகையினை மொஹமட் இற்கு செலுத்தவேண்டும்.

***(04 புள்ளிகள்)***

aat SRI LANKA

***இ)*** முகவராண்மையின் கீழ் முகவர் ஒருவரின் மிக முக்கியமான கடமைகளுள் ஒன்று முதல்வரின் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதுடன் முகவர் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை மீறலாகாது. இச்சந்தர்ப்பத்தில், **கபில** (முகவர்) 'எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முட்டைகளை ரூபா 55/- இற்கு குறைவாக விற்பனை செய்ய வேண்டாம்' என்று அறிவுறுத்தப்பட்டுள்ளார். அது வழங்கப்பட்டதொரு அறிவுறுத்தலாகும். இருந்தபோதிலும், **கபில** ரூபா 52/- விலையில் ராஜா என்பவருக்கு 1,000/- முட்டைகளை **கபில** விறபனை செய்துள்ளதுடன் முட்டைகள் நல்ல தரத்திலும் காணப்படவில்லை. எனவேஇ **கபில** தனக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்ற தவறியுள்ளார். எனவே, **ராஜா சரத்**திடம் இருந்து நட்டஈட்டினை பெறுவதற்கு உரித்துடையவராகமாட்டார். குறித்த தொகை **கபில** வினால் செலுத்தப்படவேண்டும்.

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

***B பகுதி முடிவு***

## *வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**அத்தியாயம்: 02 ஒப்பந்தச் சட்டம் (*Contract Law*)**

**(A)**

**(அ)** எளிமையான சொற்களில் கொடைமுனைவு என்பது ஒரு தரப்பினர் நோக்கத்துடன் மற்ற தரப்பினருடன் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கான விருப்பத்தின் வெளிப்பாடாக வரையறுக்கப்படுகிறது. சட்ட அடிப்படையில் கொடைமுனைவலரால் குறிப்பிட்ட விதிமுறைகளுக்குக் கொடை ஏற்பாளரால் கட்டுப்படுவதற்கான வாக்குறுதியாக வரையறுக்கப்படுகிறது

கொடைமுனைவலரால் ஒரு கொடையை எழுத்து மூலமாகவோ, வாய்மொழியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழங்கலாம்.

பின்வருபவை வழங்கத்தக்க கோடையின் முக்கிய கூறுகள்.

- கொடை திட்டவட்டமாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும்.
- கட்டுப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் கொடை மேற்கொள்ளப்பட வேண்டும்
- கொடை ஏற்பாளருக்கு அது தெரிவிக்கப்பட்டு அவர் அதை ஏற்றுக்கொள்ற பின்னரே நடைமுறைக்கு வரும்.

ஜனவரி 08 ஆம் திகதி, ஹொரணையில் வசிக்கும் கஹதுடுவ என்ற மஞ்சள் விநியோகத்தர் ஒருவருக்கு அப்சரி அழைப்பு விடுத்து 500 கிலோ இலங்கை மஞ்சளை ஒரு கிலோ ரூ. 5,000.∴- என்ற விலையில் வழங்குவதற்கான கொடையை மேற்கொண்டாள் .

இந்த வாய் மூலமான தொடர்பாடல் சரியான ஒரு கொடையின் அனைத்துத் அங்கங்களையும் தெளிவாகப் பூர்த்தி செய்கிறது என்று தோன்றுகிறது. இது தெளிவானது மற்றும் திட்டவட்டாமானது அதே சமயம் கட்டுப்படும் நோக்கத்தையும் கொண்டுள்ளது. எனவே அப்சரியின் தொலைபேசி அழைப்பு

கஹதுடுவவுக்கு சரியான கொடையை ஏற்படுத்தியது.

**(03 *புள்ளிகள்*)**

**(ஆ)**

இந்த விஷயத்தில் தபால் விதி பொருந்தும்.

கொடைஏற்பு கொடைமுனைவாளருக்கு அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்பட்ட பின்னரே நடைமுறைக்கு வரும் என்பது பொதுவான விதி. கொடைஏற்பு கொடைமுனைவாளருக்கு தெரிவிக்கப்பட்ட பின்னரே ஒப்பந்தம் நிறைவடைகிறது

இருப்பினும் அஞ்சல் முறையிலான ஒப்பந்தங்கள் பொது விதிக்கு விதிவிலக்காகும்.

தரப்பினர்கள் தபால் மூலம் தெரிவிக்க ஒப்புக்கொண்டிருந்தால் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்றுக்கொண்டிருந்தால், அஞ்சல் வழியாக கடிதத்தை அனுப்பும் பொது, கடிதம் பெறப்பட தாமதமானாலும் கடிதத்தை அஞ்சல் மூலம் அனுப்பப்படும் போதே ஏற்றுக்கொள்வது முழுமையடைகிறது என்பது விதி.

மேற்கூறிய கோட்பாடு <u>ஆடம்ஸ் எதிர் லிண்ட்சே</u> விதி என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த சூழ்நிலையில் அப்சாரி 500 கிலோகிராம் இலங்கை மஞ்சளை ஒரு கிலோகிராம் ரூ.5,000/- க்கு கஹதுடுவ என்பவரிடமிருந்து கொள்வனவு செய்ய முன்வந்தார்.

அத்தோடு கொடை ஏற்பை தபால் மூலம் தொடர்பாட வெளிப்படையாக ஒப்புக்கொண்டனர்.

ஜனவரி 10 ஆம் தேதி காலை, கஹதுடுவ குறிப்பிட்ட விலைக்கு குறிப்பிட்ட அளவை வழங்க தயாராக உள்ளதாக குறிப்பிட்டு தனது கொடைஏற்பு கடிதத்தை அப்சரிக்கு அஞ்சல் செய்தார். ஜனவரி 13 அப்சரியின் அலுவலகத்திற்கு கடிதம் கிடைத்தது. அப்சரிக்கு பதின்மூன்றாம் திகதியே தபால் கிடைத்திருந்தாலும் தபால் விதியின்படி 10ம் திகதி இரு தரப்பினருக்கும் இடையே சரியான உடன்பாடு எட்டப்பட்டதாக கருத்தப்புகிறது. அதன்படி, அப்சரி எந்த காரணத்திற்காகவும் மஞ்சள் வாங்க மறுத்து ஒப்பந்தத்தை மீறியுள்ளார்.

ஒப்பந்தத்தை மீறியதற்காக அப்சரி மீது வழக்குத் தொடர கஹதுடுவவுக்கு உரிமை உண்டு.

வழக்கு சட்டங்கள்

<u>சிலோன் பல்கலைக்கழகம் எதிர் பெர்னாண்டோ</u>

<u>வீட்டுத்தீ வண்டி மற்றும் விபத்து காப்பீட்டு நிறுவனம் எதிர் கிராண்ட்</u>

**(06 *புள்ளிகள்*)**

**(இ)**

ஒருதலைப்பட்ச ஒப்பந்தங்கள் என்ற கருத்து இந்த விஷயத்தில் பொருந்தும்.
கொடைஏற்பு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னரே நடைமுறைக்கு வரும் என்பது பொதுவான விதி. இருப்பினும் ஒருதலைப்பட்ச ஒப்பந்தங்கள் பொது விதிக்கு விதிவிலக்காகும்.

கொடைமுனைவாளர், ஏதாவது ஒன்றில் நேரடியாகச் செயல்படுவதற்கான அதிகாரத்தை கொடைஏற்பாளருக்கு வழங்கினால், அச்சந்தர்ப்பத்தில் தகவல்தொடர்பாடல் இல்லாதபோதிலும் கொடைஏற்பாளர் அவ்வழிமுறைகளின்படி செயல்பட்டவுடன் கொடைஏற்பு நடைமுறைக்கு வரும்.

சர் சி.ஜே.வீரமந்திரி, இந்தக் கருத்தை எல்.ஜே.பொவென் மேற்கோள்காட்டி கேள்வி தனது புத்தகத்தில் கூறியுள்ளார்.
காணாமல் போன நாயைப் பற்றிய அறிவிப்பைப் பார்த்த ஒருவர், தான் நாயை கண்டுபிடிக்கப் போவதாக உரிமையாளரிடம் தெரிவிக்க வேண்டுமா? அத்தகைய சூழ்நிலையில் அவர் கண்டுபிடிக்கப் போகிறார் என்பதை மிகத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. அத்தகைய சூழ்நிலையில், கண்டுபிடிக்கும் செயலில் ஈடுபடுவதன் மூலம் கொடைஏற்பு மேற்கொள்ளப்படும். இத்தகைய ஒப்பந்தங்கள் ஒருதலைப்பட்ச ஒப்பந்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

மேற்கூறிய கோட்பாடு கார்லில் எதிர் கார்போலிக் ஸ்மோக்பால் நிறுவனம் எனும் வழக்கிலும் விவாதிக்கப்படுகிறது.
கார்போலிக் ஸ்மோக்பால் நிறுவனம் பரிந்துரைக்கப்பட்டபடி அவர்களின் தயாரிப்பை பயன்படுத்திய பிறகு இன்ஃப்ளூயன்ஸாவால் பாதிக்கப்பட்ட எவருக்கும் £100 வெகுமதியாக வழங்க முன்வந்தது.
பரிந்துரைக்கப்பட்டதன்படி புகையைப் பயன்படுத்திய பிறகும் திருமதி கார்லில் இன்ஃப்ளூயன்ஸாவால் பாதிக்கப்பட்டார். அவள் 100 பவுண்டுகளை வெகுமதியாகக் கோரினாள், அதை நிறுவனம் செலுத்த மறுத்தது. இது உலகிற்கு மேற்கொள்ளப்பட்ட கொடை என்றும் திருமதி கார்லில் பரிந்துரைக்கப்பட்டபடி புகை பந்தைப் பயன்படுத்தியதன் மூலம் , அவர் இந்த கொடையை ஏற்றுக்கொண்டார் என்றும் மூலம் எனவே, நிறுவனம்
அவளுக்கு 100 பவுண்டுகள் வெகுமதியாக கொடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இச் சூழ்நிலையில் அப்சரியின் , "கஹா-அலெபா" தொகையைப் பயன்படுத்துவதற்கு உரிமை கோரும் எந்தவொரு நபருக்கும் "ரூ.100,000.∴-" வெகுமதி வழங்கப்படும் செய்தித்தாள் விளம்பரம் உலகம் முழுவதும் ஒரு கொடை.
அத்தகைய கொடைமுனைவுகள் எந்தவொரு குறிப்பிட்ட நபருக்கும் வழங்கப்படுகின்றன. எனவே இந்த கொடைமுனைகளளை யார் வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்ளலாம். இந்த கொடைமுனைவு

குறித்து செயல்படுவது மூலம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது, குறிப்பாக தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. எனவே கொடுக்கப்பட்ட சூழ்நிலையில், அப்சரியால் சரியான கொடைமுனைவு மேற்கொள்ளப்பட்டதால் சித்தாரா-குருன்னான்ஸே மற்றும் சித்தாரா-குருன்னான்ஸே இந்த கொடைமுனைவை பரிந்துரைக்கப்பட்ட முறையின்படி கோவிலில் ஓவிய வேலைகளுக்காக"கஹா-ஆலெபா" பயன்படுத்தியதன் மூலம் ஏற்றுக்கொண்டனர். எனவே சரியான ஒப்பந்தம் அப்சரி மற்றும் சித்தாரா-குருன்னான்சே இடையே உருவானது. அதன்படி, சித்தரா-குருண்ணன்சே "முாயயுயுடநிய" பயன்பாட்டினால் ஏற்படும் இழப்புகளுக்கு இழப்பீடு பெற ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளவாறு போன்ற உரிமைகள் உள்ளன.

இச் சூழ்நிலையில் அப்சரியின் , "கஹா-அலெபா" தொகையைப் பயன்படுத்துவதற்கு உரிமை கோரும் எந்தவொரு நபருக்கும் "ரூ.100,000/-" வெகுமதி வழங்கப்படும் செய்தித்தாள் விளம்பரம் உலகம் முழுவதும் ஒரு கொடை.

அத்தகைய கொடைமுனைவுகள் எந்தவொரு குறிப்பிட்ட நபருக்கும் வழங்கப்படுகின்றன. எனவே இந்த கொடைமுனைகளளை யார் வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்ளலாம். இந்த கொடைமுனைவு குறித்து செயல்படுவது மூலம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது, குறிப்பாக தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. எனவே கொடுக்கப்பட்ட சூழ்நிலையில், அப்சரியால் சரியான கொடைமுனைவு மேற்கொள்ளப்பட்டதால் சித்தாரா-குருன்னான்ஸே மற்றும் சித்தாரா-குருன்னான்ஸே இந்த கொடைமுனைவை பரிந்துரைக்கப்பட்ட முறையின்படி கோவிலில் ஓவிய வேலைகளுக்காக"கஹா-ஆலெபா" பயன்படுத்தியதன் மூலம் ஏற்றுக்கொண்டனர். எனவே சரியான ஒப்பந்தம் அப்சரி மற்றும் சித்தாரா-குருன்னான்சே இடையே உருவானது. அதன்படி, சித்தரா-குருண்ணன்சே "முாயயுயுடநிய" பயன்பாட்டினால் ஏற்படும் இழப்புகளுக்கு இழப்பீடு பெற ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளவாறு போன்ற உரிமைகள் உள்ளன.

**(06 *புள்ளிகள்*)**

SRI LANKA

**அத்தியாயம்: 03 பொருட்களின் விற்பனை சட்டம் (*The law of the sale of goods*)**

**(அ)**

கேள்விக்குரிய சம்பவத்தை பொருட்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் மறைமுகமான நிபந்தனைகள் தொடர்பான விதிகளிளை பின்னணிப்படுத்தி விளக்கலாம்.

பொருட்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின்படி, மாதிரி மற்றும் விளக்கம் மூலம் பொருட்களின் விற்பனை இருக்கும் இடத்தில், பொருட்கள் விளக்கத்துடன் மட்டுமல்லாமல் கொடுக்கப்பட்ட மாதிரியுடன் ஒத்திருக்க வேண்டும்.

கே-சூப்பர் 10,000 முட்டைகளை வாங்குவதற்கு உத்தரா-பிட்டாரா லிமிடெட் (ருடீ) உடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு முன் கே-சூப்பர் மாதிரியை பரிசீலனை செய்தது.. முட்டைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக உத்தரா-பிட்டாரா லிமிடெட் விவரித்துள்ளது
கே-சூப்பர் இன் ஸ்டோர் கீப்பர் 6,000 முட்டைகள் மட்டுமே காட்டப்பட்டுள்ள மாதிரிகளை ஒத்தவை எனவும்
மீதமுள்ள மொத்த முட்டைகள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படவில்லை எனவும் கண்டுபிடித்தார்.
இந்த வகையில், உத்தரா-பிட்டாரா லிமிடெட், பொருட்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் 14வது பிரிவை மீறியுள்ளது. எனவே, கே-சூப்பர் உத்தரா-பிட்டாரா லிமிடெட் மீது சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.

**(06 *புள்ளிகள்*)**

SRI LANKA

1வது விதி
குறிப்பிட்ட பொருட்களின் விற்பனைக்கு நிபந்தனையற்ற ஒப்பந்தம் இருந்தால், விநியோகிக்கக்கூடிய நிலையில், பொருட்களின் உரிமை ஒப்பந்தம் செய்யப்படும் போது வாங்குபவருக்கு செல்கிறது, அது பணம் செலுத்தும் நேரம் அல்லது விநியோக நேரம் அல்லது இரண்டும் ஒத்திவைக்கப்படுவது முக்கியமற்றது.
2வது விதி
குறிப்பிட்ட பொருட்களின் விற்பனைக்கு ஒப்பந்தம் இருந்தால், விநியோகிக்க முடியாத நிலையில், பொருட்களை விநியோகிக்கக்கூடிய நிலையில் வைக்கும் நோக்கத்திற்காக விற்பனையாளர் அவற்றை ஏதாவது செய்ய வேண்டும் என்றால், அத்தகைய காரியம் செய்யப்படும் வரை மற்றும் அதை வாங்குபவருக்கு அறிவிக்கும் வரை உரிமை மாறாது.
3 வது விதி
குறிப்பிட்ட பொருட்களின் விற்பனைக்கு ஒப்பந்தம் இருந்தால், விநியோகிக்க முடியாத நிலையில், ஆனால் விற்பனையாளர் விலையைக் கண்டறிவதன் நோக்கத்திற்காக எடை அளவிடல், சோதனை

அல்லது வேறு சில செயல்கள் அல்லது பொருட்களைக் குறிக்கும் பொருட்களைச் செய்ய வேண்டும் எனில் அத்தகைய செயல் செய்யப்படும் வரை மற்றும் அதை வாங்குபவருக்கு அறிவிக்கும் வரை உரிமை மாறாது.

4 வது விதி
பொருட்களை வாங்குபவருக்கு ஒப்புதலின் பேரில் வழங்கும்போது, அல்லது "விற்பனை அல்லது திருப்பிக் கொடுத்தல்" அல்லது பிற ஒத்த விதிமுறைகள் மேல் கொள்வனவு செய்திருப்பின் வாங்குபவர் ஒப்புதல் அளிக்கும் வரை அல்லது ஒப்புதல் அளித்தது போல குறிக்கும் வேறு செயல்கலை செய்யும் வரை அல்லது பரிவர்த்தனையை ஏற்றுக்கொள்ளும் வேறு ஏதேனும் செயல் உரிமை மாறாது.
(அந்த பொருளை மற்றொரு நபருக்கு விற்பனை செய்தல்அல்லது அடமானத்திற்கு வைத்தல்.)

**(05 *புள்ளிகள்*)**

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

***C பகுதி முடிவு***

SRI LANKA

***Notice:***

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*